ब्रह्मविद्या

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

[illegible]

மாதம் ஒருமுறை பிரசுரஞ்செய்யப்படும்.

[illegible]

உ-ம் புத்தகம். } சிதம்பரம்:—சர்வஜித்துஸ்ரீ பங்குனிமீ உ௰வைக்கு ௧௮௮௮ஸ்ரீ மார்ச்சுமீ ௩௧-உ சனிக்கிழமை. {இலக்கம்-௰.

[illegible]

மடாதிபதிகளுக்கு ஓர் விண்ணப்பம்.

உசிதமான விருதுகளுடன் கூடியும் சமயாசாரிய பதவியைப் பெற்றும் சர்வ ஜனங்களும் பணியும் பெரும்புகழெய்தி ஸ்ரீமடாதிபதிகளாகிய எமது குருமணிகள் மேலான சனத்தை வணங்கி அவரது கனத்தின் திருநோக்கை எதிர்பார்த்து அத்திருநோக்கே எமக்குண்டாகும் எவ்வித குறைவையும் விலக்கி ஆறுமுதலிய நாற்பயனையும் தருமென்னும் முழு நம்பிக்கையுடன் ஓர் விண்ணப்பத்தை ஸ்ரீ மகாசந்நிதானத்தில் வைக்கத் துணிந்தோம்.

சீஷர்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து எங்கள் கஷ்டநிஷ்டூரங்களைத் தமது மேலான கனம் விலக்குமென்பதும் இவ் விண்ணப்பத்தால் மனமகிழுமென்பதும் எமது துணிபு.

இப் பரதகண்டத்தில் ஜனம்பொருந்திய தங்கள் மேலான முன்னோர்களான முனிவர்கள் இவ்விந்துதேசத்தில் பிறந்து இந்துக்களென்று வழங்கப்படும் பரதகண்டத்து ஜனங்கள் கொண்ட திவ்விய சித்தாந்தங்களை நிலைநாட்டிப் பலவித நியாயங்களால் புறமதங்களை வென்று கருணைமாரி பொழிந்து உண்மையைக் காட்டி அக்காலத்திருந்த எம்முன்னோர்களை அநுக்கிரகித்து அவருக்குப் பேரானந்தவெள்ளம் பெருகச்செய்தனரென்று வெகுவாய் எங்கும் பல சரித்திரங்களாலறிந்தவிஷயமே. அக்காலத்துதித்த எம்முன்னோர் தமக்கு அம்மகாவாசாரியர் பாதகமலங்களே துணையென்று நம்பிநின்றனர். அவரது நம்பிக்கையும் அவருக்குசிதமான பயனையீய்ந்தது. யாமே அவ்வித பூர்வகால மனிதர்களின் குலத்திற் பிறந்தோர். தமது மேலான கனமே அவ்வாசிரிய மணிகளின் கல்விவழி மாறாத திருக்கை மலர்வழி பிறந்தது. ஆதலால், அரசர்கள் இராஜ்ஜியத்திற்கும் பொருளுக்கும் அதிபதிகளாவதுபோல தங்கள் மேலான கனம் எமது மதம், வருணம், தருமம் இவைகளுக்குப் பெரும்பதியாம். அங்ஙனமே அநேகமாய்த் தங்கள் மேலான கனத்தின் முன்னோர் அநுஷ்டிக்கவும் எமது முன்னோர் அவரது ஆஞ்ஞைக்கடங்கிநின்று தொண்டுபுரியவும் வெகுகாலஞ் சென்

'ஓர் சம்ஸ்கிருதபண்டிதர்" ஷெவிடைகளைக் கண்டித்து, "கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு" என்னும் புத்தகமொன்று ஒன்பது பாரத்தில் அச்சிட்டிருக்கின்றார். சமய ஆராய்ச்சிசெய்யும் யாவரும் அதை வாங்கிவாசிக்கவேண்டியதே. விலையும் சொற்பம்; காகிதமோ உயர்ந்தது. வேண்டியவர், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதி 316-நெ. மதராஸ் ரிப்பன் பிரஸில் ம-ள-ள-ஸ்ரீ சை. ர. நமசிவாயசெட்டியாரிடத்திலும், சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரிடத்திலும் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா 2.
தபாற்கூலி பை 6.

அறிவிப்பு
சர்வதாரிவருஷத்து
ரிப்பன் தமிழ்ப்பாக்கெட்
பஞ்சாங்கம்.

இப்பஞ்சாங்கம் 1888 ௵ மார்ச்சு ௴ 15 ௳க்குள் வெளியாகும்.

புத்தகம் 1-று விலை அணா 6. தபால்பாகிங்சார்ஜ் அணா 1.

10று ஒன்றும் 25 று 3. ம் 50 று 7. ம் 100று 15 ம். அதிகமாகக்கொடுக்கப்படும்.

☞ பிப்ரவரி ௴ 10 ௳க்குள் முன்பணம் அனுப்புவோர்க்கு 100 று 20 புஸ்தகம் அதிகமாகக்கொடுக்கப்படும்.

இங்ஙனம்
☞ சை இரத்தினசெட்டியார்.
புரொப்ரயிட்டர்
மதராஸ் ரிப்பன் பிரெஸ்
316. தம்புசெட்டிவீதி.
சென்னை.

சிதம்பரம்
ஜீவகாருண்ணிய நிரந்தர
கஞ்சித்தொட்டி யாசகதர்மம்.

இத்தருமம் இம் மார்கழி௴ அ-௳ முதல் ஆரம்பிக்கப்பட்டுச் செவ்வையாகநடந்துவருகிறது. இதன் உத்தேசம் வேலைசெய்ய சக்தியற்ற கூன், குருடு, முடம் முதலிய ஜனங்களைக் கஞ்சி வார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்பதே. இது ஒரு பெரிய காரியமாயினும், தீனர்களிடம் தயவுள்ள கனவான்கள் உதவியிருந்தால் நிலைபெறுமென்பதற்கு ஐயமில்லை. உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களாகவாயினும், திரவியமாகவாயினும் சகாயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன்.

மேற்குறித்த தருமத்தையன்றி இம்மாதமுதல், வெய்யிலில் வழிநடந்து தாகத்தினால் நாவரண்டு தவித்துக் களைத்து வரும் வழிப்போக்கர்களை ஆதரிக்கும்பொருட்டு, எத்தருமத்தினுஞ்சிறந்த உத்தமோத்தமதருமமாய கிடைத்தற்கரிய தண்ணீர்ப்பந்தல் தருமமும் வைத்து நடத்திவருகின்றேன். இத்தருமங்கள் தளர்வின்றி மென்மேலும் ஓங்கத் தருமவான்களாகிய செல்வப்பிரபுக்கள் தயைபுரிவாராக.

C. S. நரசய்யர்,
கஞ்சித்தொட்டி யாசகர்
சிதம்பரம்.

இந்து டிராக்ட் ஸொஸைட்டி.

(இந்த இந்துசங்கம் கலியுகாதி ௫௲௯௱௮௰௮-வது சர்வஜித்து௵ சித்திரை௴ த்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

இச்சங்கத்தின் முக்கிய கருத்துகள்:—

(1) இந்துமதத்தைப் பரவச்செய்தல்; அதனை விரோதிகளைக் கண்டித்து அதைப் பாதுகாத்தல். (2) இந்து மகாஜனங்களுடைய யோகக்ஷேமத்திற்காகப் பாடுபடுதல். (3) நீதிமார்க்கங்களையும், கல்விவிஷயங்களையும் ஆதரித்து அபிவிருத்திசெய்தல்.

சுதேசபாஷைகளிலும் இங்கிலீஷிலும் சிறு பத்திரிகை, புத்தகம் இவற்றைப் பரவச்செய்தும், பகிரங்க உபந்நியாசம் புரிவித்தும், வாதம் செய்வித்தும் மேற்படி கருத்துகள் நிறைவேற்றப்படும்.

இச்சங்கத்துக்கு ௵ 1-று சந்தா குறைந்தது ரூபா 1—12—0
(இது முன்பணமாகக் கட்டவேண்டியது.)

அக்கிராசனாதிபதி:—ப்ரம்மஸ்ரீ, ம-ள-ள-ஸ்ரீ, ஆர். சிவசங்கர பண்டியா அவர்கள், பி-ஏ. எப்-டி-எஸ்.

காரியதரிசி:—ப்ரம்மஸ்ரீ ம-ள-ள-ஸ்ரீ, தீ. வி. பெரியசாமி ஐயரவர்கள்.

சுதேசமதாபிமானிகளான இந்துக்கள் யாவரும் இந்த மதி சங்கத்திற்குத் திரவியசகாயம் செய்யப் பிரார்த்திக்கப்படுகின்றார்கள். இச்சங்கத்தில் சேர்ந்தவர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதியில் இந்துடிராக்ட்ஸொஸைட்டியின் காரியதரிசியவர்கள் பேருக்குத் தபால்சார்ஜுக்காக அரை அணாத் தலை அனுப்பினால், ஷெ அக்கிராசனாதிபதி அவர்களா லியற்றப்பட்ட இந்துமத வினாவிடையென்னும் புத்தகத்தை யினாமாகப் பெறுவார்கள். இச்சங்கத்தைப்பற்றி இன்னும் யாதேனும் கேட்க விரும்புவோர், காரியதரிசியவர்கள் பேருக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

விசேஷ அறிவிப்பு.

கையொப்பநேயர்காள்!

நாம் இப்பத்திரிகையை மாதம் இருமுறை பிரசரித்தற்பொருட்டு அவ்விஷயத்தில் நண்பர்கள் அபிப்பிராயத்தையும் தெரிவிக்கும்படி இருமுறை அறிக்கைசெய்தோம். அதனைக் கண்ணுற்ற அபிமானிகள் பலர் தத்தமபிப்பிராயங்களை வெளியிட்டு அங்ஙனஞ்செய்தல் அத்தியாவசியகமெனத் தெரிவித்திருக்கின்றனர். அங்ஙனமே இப்பத்திரிகையின் மூன்றாவது வருஷ ஆரம்பகாலமாகிய ௧௮௮௮-௵ ஜனவரி௴ முதல் மாதம் இருமுறை பிரசரிக்க, உத்தேசித்திருக்கின்றேம். பத்திரிகையை இரட்டித்தும் அதன் கிரயத்தைமட்டும் வைதிக லௌகிக கனவான்களின் சௌகரியத்தை நோக்கி மிகக் குறைத்தேயிருக்கின்றேம். அதனை அடியில்வருமாறு காண்க:-

பத்திர கிரயம்.

	ரூ.	அ.	பை.
வருஷம் ௧-று	௨	௧௨	0
மாசம் ௬-று	௧	௮	0
மாசம் ௩-று	௧	0	0
காபி ௧-று	0	௩	௬
இலங்கைக்கு ௵ ௧-று	௩	௮	௦

இதுவரையில் பாக்கி செலுத்தாமலிருக்கிற கையொப்பக்கனவான்கள் இன்னும் மௌனமுறாமல் உடனே தத்தம் பாக்கித்தொகைகளை அனுப்பி இச்சமயத்தில் கைதந்து உதவிபுரிவார்களென்று எதிர்பார்க்கிறேம். பத்திராதிபர்.

ப்ரஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

௨-ம் புத்தகம்.
சிதம்பரம்:—சர்வஜித்துஸ்ரீ பங்குனிமீ ௨௰க்கு
௧௮௮௮ஸ்ரீ மார்ச்சுமீ ௧௧-௨. சனிக்கிழமை.
இலக்கம்-௰.

ஸ்ரீ [illegible]

[illegible]

மடாதிபதிகளுக்கு ஓர் விண்ணப்பம்.

உசிதமான விருதுகளுடன் கூடியும் சமயாசாரிய பதவியைப் பெற்றும் சர்வ ஜனங்களும் பணியும் பெரும்புகழ்ப்பெற்ற ஸ்ரீமடாதிபதிகளாகிய எமது குருமணிகள் மேலான சனத்தை வணங்கி அவரது கனத்தின் திருநோக்கை எதிர்பார்த்து அத்திருநோக்கே எமக்குண்டாகும் எவ்வித குறைவையும் விலக்கி அறமுதலிய நாற்பயனையும் தருமென்னும் முழு நம்பிக்கையுடன் ஓர் விண்ணப்பத்தை ஸ்ரீ மகாசந்நிதானத்தில் வைக்கத் துணிந்தோம்.

சீவர்கள் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து எங்கள் கஷ்டநிஷ்டூரங்களைத் தமது மேலான கனம் விலக்குமென்பதும் இவ் விண்ணப்பத்தால் மனமகிழுமென்பதும் எமது துணிபு.

இப் பரதகண்டத்தில் சனம்பொருந்திய தங்கள் மேலான முன்னோர்களாகிய முனிவர்கள் இவ்விந்துதேசத்தில் பிறந்து இந்துக்களென்று வழங்கப்படும் பரதகண்டத்து ஜனங்கள் கொண்ட திவ்விய சித்தாந்தங்களை நிலைநாட்டிப் பலவித நியாயங்களால் புறமதங்களை வென்று கருணைமாரி பொழிந்து உண்மையைக் காட்டி அக்காலத்திருந்த எம்முன்னோர்களை அநுக்கிரகித்து அவருக்குப் பேரானந்தவெள்ளம் பெருகச்செய்தனரென்று வேதுவாய் எங்கும் பல சரித்திரங்களாலறிந்தக் விஷயமே. அக்காலத்துதித்த எம்முன்னோர் தமக்கு அம்மகாவாசாரியர் பாதகமலங்களே துணையென்று நம்பியிருந்தனர். அவரது நம்பிக்கையும் அவருக்குசிதமான பயனையீய்ந்தது. யாமே அவ்வித பூர்வகால மனிதர்களின் குலத்தில் பிறந்தோர். தமது மேலான சனமே அவ்வாசிரிய மணிகளின் கல்விவழி மாறாத திருக்கை மலர்வழி பிறந்தது. ஆதலால், அரசர்கள் இராஜ்ஜியத்திற்கும் பொருளுக்கும் அதிபதிகளாவதுபோல தங்கள் மேலான கனம் எமது மதம், வருணம், தருமம் இவைகளுக்குப் பெருமதிபதியாம். அங்ஙனமே அநேகமாய்த் தங்கள் மேலான கனத்தின் முன்னோர் அநுஷ்டிக்கவும் எமது முன்னோர் அவரது ஆஞ்ஞைக்கடங்கிநின்று தொண்டுபுரியவும் வெகுகாலஞ் சென்

[illegible]

றது. அக்காலத்தவதரித்த தங்கள் மேலான கனத்தின் மூன்னோர் தவ வலிமையாலும் கல்வித்திறமையாலும் நமது மதம் பெருகி வளர்ந்து பேரானந்தமளித்து வந்தது. அவ்விதம் தவ வலிமையால் மதங்களைக் காத்தலே தங்கள் மேலான கனத்திற் குசிதமாணதென்பது அங்கு திருவுளமறிந்ததே. இவ்வுலக வாசனைகளைத் துறந்த உத்தமர்களுக்கு இதுவே முக்கிய தருமமெனச் சொல்லவும் வேண்டுமோ. லோகோபகாரமல்லவோ ஞானிகள் விவகாரம். இக்காலத்தில் நமது துர்ப்பாக்கியத்தாலோ நம்மவர்க்கு ஒற்றுமை யற்றதாலோ மேற்றிசையாருக்குள்ள பெருமையாலோ மற்றவர் சாதனத்தின் மகிமையாலோ பெரியோர்கள் பெரும்பாலும் ஒடுங்கியதனாலோ நமது சுதேச ராசாக்கக் குறைவாலோ நம்மவர் முயற்சியின்மையாலோ தங்கள் மேலான கனத்தின் உதாசீனத் தன்மையாலோ ஆசிரியர்களுக்கு மாணுக்கரிடம் அன்பு குன்றியதாலோ பிறிதெக்காரணத்தாலோ அறியேர், பெரும்பாலும் வேதங்கள் வழிமாறின; யோகம் ஒளித்தது; புராணங்களோ சிதறுண்டன; ஸ்மிருதிகளை ஸ்மரிப்பாருமிலர், அதன்வழி அனுஷ்டிப்பாருமிலர்; வித்துவான்களை யாதரித்த லரிதாயிற்று; தேவாராதனம் குன்றியது; பெரியோர் பக்தி பெரிது மொழிந்தது: மதாசரிய விசாரம் மயங்கின்றது; நம்மவர்க்கு வயிற்றுப்பாடே பெரும்பாடாயிற்று. இம்மட்டிலேனும் "நம்மவர் குற்றமற்றிருப்பதே பெருங்குண" மென்று எண்ணிமொழியவும் இடமில்லை. பெரியோர்களே! ஆசிரியமணிகளே! இப் பெருங் கொடுமையைச் சிறிது கேண்மின்! அந்தோ! இச்சமயம் நம்மவர் ஏமாந்தது கண்டு, மாயாமயர்களான பாதிரிமாரென்னும் ஜாலவித்தைக்காரர், பட்டணங்கள், கிராமங்கள், சிறுகுப்பங்கள் எங்கும் நுழைந்து பல உபாயங்களைக் கைக்கொண்டு பலவிதமாய் நமது மதங்களைத் தூஷித்துப் பல புஸ்தகங்களைப் பதிப்பித்தும், பகிரங்கமாய்ப் பலவிடங்களில் நின்று பிரசங்கித்தும், சிறுதுண்டுப்பத்திரிகைகளை இலவசமாகக் கொடுத்தும் பலரைப் பலவித ஆசைவார்த்தைகளால் ஏமாற்றியும், பற்பல கோவில்களைக் கட்டியும், நம் ஏழைச்சிறுவர்களைத் தம் தாய் தந்தையர் பெண்பிள்ளை சுற்றத்தார் முதலாயினோரை இழந்து, தம்மினத்தாரை நிஞ்ஞானிகளென்று நேரே பொழிந்து பெற்றோர் வயிறு பற்றியெரிந்து பரிதக்க விட்டு, தம் கிறிஸ்துமதப்படுகுழியில் வீழும்படி செய்தும், அங்ஙனமே நம் அறியாப் பேதைச் சிறு பெண்குழந்தைகளிலும் பலரை மோசஞ்செய்தும் வருகின்றார்கள். அம்மதப் படுகுழியில் வீழ்ந்த நம்மவரோ நம்மதத்தை இகழ்ந்துபேசத் துணிந்து வெளிவந்திருப்பது நமக்கு எவ்வளவோ குறைவாயிருக்கின்றது. இவ்விதமிருக்க, இதற்கிடையில் சிலர் முற்றிலும தெய்வபக்தியற்று நாஸ்திகமார்க்கத்தைக் கையாடுகின்றார்கள். உலகம் பலவிதமாக மாறிற்று. மேலும் கீழுமாய்ப் புரண்டாற்போலிருக்கின்றது. எமது குருநாதர்களே! இவ்வளவுதூரம் மதத்திற்கு நேரிட்ட சங்கடம், தங்கள் கனத்தின் கவனத்திற்கு வரவில்லையே. இக்கஷ்டத்தை ஒழிக்கவில்லையே. நம்மதத்தைப் பெருக்கவில்லையே. மேற்றிசையார் துர்ப்போதனையால் மயங்கிய எம் மனத்தைச் சற்போதனையால் குளிரச்செய்யவில்லையே. அவரது முயற்சியைத் தடுக்கவில்லையே. நம்மத உண்மைகளை உபதேசிக்கவில்லையே. கற்றுணர்ந்த சிஷ்யர்களைக்கொண்டு ஆங்காங்கு வித்துவசபைகளை ஏற்படுத்தவில்லையே. ஆசாரங்களைச் சீர்திருத்தவில்லையே. நாஸ்திகத்தைக் களையவில்லையே. நீதி

[illegible] (Hindoo Tract Society) [illegible]

[illegible]

களைப் போதிக்கவில்லையே. இங்ஙனமிருந்தால் எமக்குத் தங்கள் மேலான கனத்தைத் தவிர வேறு கதியாதுளது? தங்கள் கனத்தின் முன்னோர்களைக் கதைகளிற் கேட்டோம். தங்கள் கனத்தையே நாம் அவராக எண்ணிக் கண்டோம். காமோ மிக ஏழைகள். இக்காலக்கொடுமையால் எமது கைத்தொழில்களும் ஒழிந்துபோயின. அதிகவரிகளால் வருந்தும் எமக்குக் கிருஷித்தொழிலும் வெறுக்கத்தக்கதாயிற்று. இவ்விதம் பலவாறு நொந்திருக்கும் எம்மிடம் தங்கள் கனமும் பராமுகமானால் பின் என்செய்வோம். எங்கு செல்வோம். எமது துர்ப்பாக்கியத்தின் மகிமை யிதுவோ. உலகத்தில் உண்மையான மதத்தை ஸ்தாபித்தல் எல்லாமறிந்த உத்தம குருவாகிய தங்கள் கனத்தின் பாரமல்லவோ. உதாசீனஞ்செய்தல் முறையாமோ. இருடை சுருங்கள். மதகாரியத்தில் முயலுங்கள். சீஷர்களைக்கொண்டு ஆங்காங்கு சன்மார்க்கங்களைப் பிரசங்கம் புத்தகம் பத்திரிகை முதலியவற்றால் வெளியிடுங்கள். தெருவிலேனும் தேவாலயத்திலேனும் உற்சவங்களிலேனும் ஊர்களிலேனும் உண்மை மதத்தை உபதேசிக்கவுத்தரவளியுங்கள். நாத்திகத்தை யொழியுங்கள். கிறிஸ்துமதப் பெருவெள்ளத்தைத் தடுக்க முயலுங்கள். அதற்கென வெளிவந்த பண்டிதர்களையாதரியுங்கள். உபநியாசமார்க்கத்தைக் கற்பிக்கும் பாடசாலைகளை யேற்படுத்துங்கள். சென்னையில் இதற்கென ஏற்பட்ட "இந்துடிராக்ட் சொஸைட்டி" என்னும் சங்கத்தை ஆதரித்துப் போஷியுங்கள். இப்பொழுதும் உதாசீனமாயிருந்தால் இனி நமது மதம் ஒழிந்தேபோம் என்பதற் கையமில்லை. இது விஷயத்தில் தங்கள் மேலான கனத்தினும் வேறெவர் முயன்றால் முடிவு பெறும். இது விஷயத்தில் தமது கனத்திற்கு பணக்குறைவிருக்குமேல் ஸம்மவரிடம் பெறலாம். வீணாரம்பங்களை ஒழியுங்கள்! தமது மேலான கனத்தின் முன்னோர் பெற்ற பெருமையையும் புண்ணியத்தையும் பெறுங்கள். இஃதொழிந்து தரவிபணிகளாகிய தங்களுக்குக் காரியம் வேறுளதோ? சொற்குற்றமிருப்பின் பொறுத்தருளவேண்டும். குருமணிகளே! அநேக வந்தனம் முன்னுவந்தளித்தோம். பரமகிருபாநிதியாகிய பரமேசுவரனது பேரருளால் தமது கனத்திற்கு எம்மிடம் கருணைபெருகக் கைகூப்பிப் பிரார்த்திப்போமாக. இங்ஙனம் மகாமகிமைதாங்கிய ஆசிரியர்களிடம் அநேககோடி வந்தனங்களுடன் துர்மத துர்ப்போதனத்தால் வருந்திய சிஷர்கள் செய்த ஓர் சிறு விண்ணப்பம் தமது மேலான கனத்தைச் சந்தோஷிக்கச்செய்யுமென்றும் தங்கள் மேலான கனத்தின் கருணையால் எமது கோரிக்கை வீணாகாது நிறைவேறுமென்றும் வேண்டிக்கொள்ளும்,

சில இந்துக்கள்.

☞ இவ்விஷயத்தில் மடாதிபதிகள் கவனிக்கவேண்டியது ஆவசியகமே. அவர்கள் இவ்விஷயத்தில் சப்பாது கருணைசெய்வாரென்று நம்புகிறோம். அற்றேல் அவர் மேலான கனத்திற்கு எவ்விதம் சமயாசாரியத்தன்மையும் வித்தியாபீடாதிபத்தியமும் நம் ஆசிரியரென்பதும் உசிதமாகும். இந்துக்களே நல்வழிச் சென்றீர். இவ்வித மத ஆபத்துக்காலத்தில் மற்றெவரை நாம் வேண்டத்தகும். இவ்விண்ணப்பத்தைப் பார்த்து இதனுட்கருத்துக்களையும் அறிவரேல் அவருள்ளம் கல்லேனுமுருகிவிடும். அவர்கள் உண்மையான வருணாசிரம மத தருமாசாரியர்களன்றோ.

பத்திராதிபர்.

[illegible]

"ப்ரம்மவித்தியா" பத்திராதிபரவர்களுக்கு வந்தனம்.

ஐயா,—பத்திராதிபரே!

யாம் எழுதும் விஷயத்தைத் தமது ப்ரம்மவித்தியா பத்திரிகையின் ஓர் கோணத்தில் பதிப்பிக்கவேண்டிக்கொள்ளுகிறேன்.

முற்காலத்தில் இந்தேசத்திலுள்ள பிராமணர் என்பவர்கள் வேள்வி முதலிய ஆறு கருமங்களையே செய்துவந்தார்கள். அத்தன்மையோர் இக்காலத்தும் சிலர் இருப்பார்கள். அவர்கள் இருப்பதாய் அநுமானமேயன்றிப் பிரத்தியக்ஷமாய் அவர்களைக்காண்டல் அரிதாயிற்று. இக்கலியின் மகாப் பிரவாகத்தில் மூழ்கிக்கொண்டுவரும் இவ்வுலகிற்கு ஏதோ ஒரு புண்ணியக்கிளையின் சுனையில் ஓர் சிற்றிடம் கிடைத்திருக்கின்றது அந்தோ! முற்காலத்துதித்த பெரியோர்களின் பெருமை என்சொல்வோம். அவர்கள் நமது தேசத்தவர்க்குச் செய்த பெரிய உபகாரம் எவ்வளவு மேலானது பாருங்கள்! அவர்கள் ஏற்படுத்திய பெரிய ஏற்பாடுகளின் பெருமையால் நன்குக வேரூன்றி நிற்கும் அபிமானும் இவர்களால் அடிக்கடி பலவிதம் தொலைக்கப்படினும், துராசாரங்களும் துர்மதவாசனைகளும் மேன்மேலும் அதைத்தடுத்துவரினும், இக்காலத்தும் இதுவரையிலும் பிராமணன் என்கிற பெயர் மாத்திரையிலாவது இருக்கின்றதேயொழிய முற்றிலும் ஒழியவில்லை. அந்தோ! ஒருவரேனும் பேரானந்தம் பெருகும்வழி இதுவென்றறிந்து அதைத்தேடிச்செல்ல முயல்வதில்லை. ஐயா, பத்திராதிபரே! இக்காலத்தில் எங்கு செல்லினும் குதர்க்கங்களும் குமார்க்கங்களும் மேன்மேலும் விருத்தியடைந்து வருகின்றன. அவ்விஷயங்களைத்தாங்கள் ஏன் முயலுகின்றீர்கள்! இந்தவேலை முடிவது மிகக்கடினம். ஐயா, இனியேனும் அசாத்தியமான இவ்வித வேலையை விடுங்கள். இது முடிவு பெறும் என்று தோன்றவில்லையே. ஆயினும தங்களைப்போன்றவர்க்கு அசாத்தியம் யாதிருக்கின்றது. ஓர் சமயம் விடாமுயற்சியால் காரியம் கைகூடினும் கூடுமாகையால் இவ்விதம் செய்வது உசிதமே. தங்கள் முயற்சி கைகூடக் கருணாகருண வாசுதேவன் அருள் புரிவார். பாருங்கள்! உயர்குலத்தாரும் முற்றிலும் நமது ஆரியவம்ச குலதனமான ஸம்ஸ்கிருத பாஷை ஒழித்து வேறு ஏதேதோ பாஷைகளைக்கற்று வருகின்றனர். நிற்க; உற்றுநோக்கில் யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்ததும் சுதந்திரப்பிரமாணமுமான சுருதி, ஸ்மிருதி, புராணம் முதலியவைகளைத் தான் பார்த்தும் அநேகம் பெரியோர் முகம் சேட்டும் சிறிதும் அதிற் கவனம் செலுத்துகின்றார்களில்லை. ஐயோ! எவ்வளவு யுக்திகளுடன் நம்மவர் ஓர் சங்கதியை வெளியிடினும் அது அவர்காதுக்கெட்டுவதேயில்லை. பாருங்கள்! காலக்கொடுமை! இதே சங்கதி ஓர் மேற்றிசை வித்துவான் எடுத்துரைப்பானேல் அதை வெகு ஆதரவாய்க் கேட்பார்கள். அவ்விதம் பிரசங்கிப்பவன் மற்றெவ்விதத்தால் குறைவுள்ளவனாயினும் அவர்களெங்கென்று தேடி ஓடி அவனைச்சூழ்ந்து அவன் சொல்வதை நம்புகின்றார்கள். இவ்விஷயத்திற் காரணர் இத்தேசத்தில் ஆங்கிலேயர் அரசாளுதல் சிறிதேனுமாகாது. ஆங்கிலேயபாஷையைக் கற்பதும் ஆசாரக்கெடுதிக்குக்காரணமன்று. இதெல்லாம் கலிகாலக் கொடுமை என்பதே எமது துணிபு. மேலும் இக்காலத்திலும் எவ்விதத்தொழிலிலும் முன்வருபவர் பிராமணர்களே. இப்பொழுதும் எந்தக் கூட்டத்திலும் அரசினர் இது விஷயத்தைப்பற்றிக் கவனிப்பதை நாம் அறிந்திருக்கிறோமல்லவா? இவர்களுக்கு மற்றவரால் அடையக்கூடாத

[illegible] (கவர்னர்) [illegible] (ஹைகோர்ட்) [illegible] (வசாலத்துக் கொடுத்தல்) [illegible]

கலெக்டர் ஜில்லாஜட்ஜி முதலிய அதிகாரங்களை அடையத்தக்க வலிமையும் அதற்கேற்பக் கல்வித்திறமையும் சுபாவத்தில் ஏற்பட்டன.

அவ்விதமே இத்தேசத்தில் இப்பொழுது நிலைபெற்றுவரும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் படிக்கும் பிள்ளைகளில் பிராமணப் பிள்ளைகள் நூற்றிற்கு எழுபத்தைந்து இருக்கின்றனர். மற்றவரோ நூற்றிற்கு இருபத்தைந்தேயிருக்கின்றனர். அவர்களுக்குள்ள கடினபாடங்களைப் படித்துத் தேறுபவரும் அநேகமாய்ப் பிராமணப்பிள்ளைகளே. மேலும், எவ்வித நியாயசபைகளிலும் நியாயவாதிகளாய் நின்று பேசுபவருள் பெரும்பான்மைபோர் பிராமணரே. மற்றைய அதிகாரங்களிலும் அதிகமாயிருப்பவர் அவரே. மற்றவர் சிறுபாலாரோயிருக்கின்றனர். இதனால் இவர்கள் நன்முயற்சியுள்ளவரென்றும் மிகுந்த புத்திமான்களென்றும் ஏற்படுமல்லவா. இவ்வளவிருந்தும் நம்மவர் தம்பெருமையறியாது வீணில் கஷ்டப்படுகின்றனரோ. இப்பொழுதே இவ்விதமாயின் இனி எப்படி முடியுமோ அறியேம். பாருங்கள்! இவர்களுக்கு நல்ல ஊக்கமிருந்தும் கல்வியிருந்தும் இவரிடம் பெரியோர்வழி நல்லொழுக்கம் குடிகொண்டும் எவ்வித சகாயமிருப்பினும் எல்லாம் வீணாகி நமக்குள்ள சுதந்திரத்தை இழந்து பரதந்திரர்களாய் யானைகள் யானைப்பாகனிடம் அடக்குவதுபோல் மற்றவருக்கிடங்கொடுத் தவரிடம் அடங்கி நிற்கும்கதி இவர்கட்கு நேர்ந்ததே. அவர்களோ புத்திமான்கள். விரல் நுழைய இடமிருந்தால் தலைநுழைப்பார்கள். அச்சூது இப்பேதைகள் அறிந்தார்களில்லை. தம்முன்னோரிருந்த நிலைமையைச் சிறிதும் கவனியாது எவ்வளவு இழிவானதொழிலேனும் கைக்கொண்டு வயிற்றைநிரப்பிவருகின்றார்கள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! இவ்வித வேலைகளுக்கு நான் முன் நான் முன்னென விழுந்து பலரை அனுசரித்து வெகு கஷ்டப்பட்டுச் சொற்பவேலையையேனும் சம்பாதிக்க, அவர் படும் கஷ்டம் அம்மட்டிம்மட்டல்லவே. இவர் கதியிப்படியிருக்க, மேற்றிசையாரோ சிறிதும் பக்ஷபாதமின்றிப் பரிபாலனஞ்செய்யும் புகழ்பெற்றவராயினும் தம்மினத்தாரெனவும் மற்றவரெனவும் சம்பளவிஷயத்தில் ஓர் வேற்றுமைசெய்துவருகிறார்கள். சிறிதும் குறைவின்றி ஒவ்வொரு வேலையையும் பார்த்துவரும் நம்மவர்க்கும் மற்றவர்க்கும் சம்பளம் வேறுபடுதல் இவ்விராஜாங்கத்துக்கு அழகாமா. பாருங்கள்! மேற்றிசையாரில் ஒருவர் கலெக்டராயின், அவருக்கென்ன சம்பளம்? இத்தேசத்தில் பிறந்து இத்தேசத்தவர் மாதிரிகளை நன்கு பழகி அறிந்து அவர்களிலும் அதிக திறமையுடன் வேலைபார்க்கத்தக்க நம்மவர் ஒருவர் அதே வேலைக்குவந்தால் அவர்களுக்குச் சம்பளம் எவ்வளவு? மற்றவரிலும் குறைந்ததன்றோ? நம்மவர்க்கு அறிவு குறைந்ததென்றோ? அல்லது நம்மவர் அறிவிற்சிறந்தவரொன்றோ? நம்மவர் கறுத்த நிறத்தவரென்றோ? நம்மவர் வெண்

[illegible]

மைக்குறியோவொன்றோ? அதிகப் டணத்தை எண்ணிக் கள்வர் கைச்சிக்காது காப்பாற்றிக் குடும்பங்களுக்கு உபயோகித்து ஆடையாபரணங்களால் வீடுகளை நிரப்பி உசிதமான தானதருமங்களையும் செய்ய நம்மவர்க்குச் சக்திக்குறைவிருக்கின்றதென்றோ? அல்லது எவ்விதச் செலவுமின்றி வாங்கிச் சமயம் நேர்ந்தபொழுது பலவழிகளாற் பெருக்கிப் பாதிரிகளிடம் கொடுத்து நம்மவரை மதத்தைவிட்டுப் புறம்பாக்கவும்படிசெய்யும் திறமை நம்மவர்களுக்கில்லையென்றோ? நம்மவர் லஞ்சத்தில் ஆசைகொள்வாரென்றோ? நம்மவர் அற்ப பணத்தை விரும்பாரென்றோ? எக்காரணத்தாலோ அறியேம். நம்மவர் மற்றவரெனப் பக்ஷபாதமின்றிக் காக்கும் நமது கவர்ன்மெண்டாரும் இவ்வித வேற்றுமையைக் காட்டுகின்றனர். இவ்விதம் தம்மை அண்டி வேலைசெய்பவரிடம் சம்பளவிஷயத்தில் பக்ஷபாதம் அவரது நடுவுநிலைமை கோடின் பெருமைக்குக் குறைவுண்டாகாது ஒழியுமோ? ஆலோசிக்குமிடத்துப் புத்திமான்களுக்கிது புலப்படாதோ. இவ்விதம் நாம் வருத்தப்படவேண்டிய விஷயங்கள் பலவிருப்பினும் நம் தேசத்துப் புத்திமான்கள் உண்டுறங்குகின்றார்கள். சிலர் இரட்டிப்பில் ஆனந்திக்கின்றார்கள். நிற்க; சொல்லவேண்டிய விஷயத்தைவிட்டுக் கிளைவிட்டுக் கிளைதாண்டிப் பல விஷயங்களை எழுதினோம். இனி விஷயத்தைக் கவனிப்போம். இவ்வித வேலைகளைப்பற்றி ஏற்கனவே முயன்று வெளிவந்து பிரசங்கிக்கத் தங்களைப்போன்றவர்கள் அநேகரிருக்க எமக்கு விசனமென்னை. இப்பொழுது சமீபகாலத்திற்கு முன் சென்னையிற் கூடிய இந்துமகாசபை கூடியதும் அதில் நடந்த சங்கதிகளும் தாங்கள் அறிந்திருப்பீர்களே. ஆயினும் நம்மவருக்குள்ள ஏழ்மை பொறுக்காது இவ்விதம் பிதற்றினேன். நம்மவர் தாமே யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப்போட்டுக்கொள்வதுபோல் கீழ்மக்களுடன் கலந்து அவர் நடையுடைகளைக் கையாடுகிறார்கள். ஒட்டகம் மாந்தளிரையொழித்து வேம்பைத் தின்பதுபோல நமது மதாசாரங்களையொழித்துப் பிறர் மதாசாரங்களைக் கொள்வதேன்? இக்காலத்துப் பிராமணர் திருக்கோலத்தைக் கவனியுங்கள். தலைமுழுதும் குடுமி. இடையில் மூன்றுமுழலை. பற்களோ கருநிறம் பூண்டன. மார்பில் பூணூலில் இரும்பு. இவ்விதம் வேஷதாரிகளையொத்த இந்த வேஷம் யாது? ஐயா, ஜாதியபிமானமொன்றிருப்பின் எல்லாமுண்டாகும். அஃது ஒன்று குறைந்திருப்பதால் மற்றதெல்லாம் குறைந்ததென்றறிக. இவ்விதக் கஷ்டம் நம்மவர்க்கு நேரிட்டது நமது குலதனமான ஒற்றுமையையும் உயர்ந்த கல்வியையும் ஒழித்ததாலன்றி வேறில்லை. ஐயா, அக்கினிஹோத்திரி தகப்பனுயின் அவர் குமாரர் விகடகவியாகின்றார். அவர் குமாரர் பாடகராகின்றார். ஆங்கிலேய பாஷையில் வல்லவர் தகப்பன்; பிள்ளை பக்ஷணக்கடைக்காரன். பேரன் மிருதங்கம் வாசிப்பான். இவ்விதமாயின் எத்தொழில் நிலைபெறும். எப்பெருமை கிடைக்கும். ஆதலால் இவ்விஷயத்தில் எமது அபிப்பிராயம் யாதெனில், ஒவ்வொரு கிராமங்களிலும்,

[illegible]

ஒவ்வொரு பக்ஷம் அல்லது ஒவ்வொரு மாசத்திலும் அல்லது வருஷத்திற் கிருமுறையேனும் பெருங் கூட்டங்கள் கூடிச் சபைகளை நடத்தவேண்டும். அதில் ஆஸ்திகராயுள்ள நம்மவர் சேர்ந்து நமது மத ஜாதியின் சீர்திருத்தத்தைப்பற்றிய அபிப்பிராயங்களை வெளியிடவேண்டும். அவ்வித விஷயங்களைச் சேர்த்துத் தள்ளற்பாலவைகளைத் தள்ளிக் கொள்ளற்பாலவைகளைக் கொண்டு நமது ப்ரம்மவித்தியா பத்திரிகை வாயிலாக வெளியிடவேண்டும். பல சில்லறைப் பத்திரிகைகளால் தூண்டுதல்செய்துவரவேண்டும். இவ்விதம் விடாது முயன்றால் நம்மவர்க்கு ஒற்றுமையுண்டாகும். அதுவிஷயத்திற்கு வேண்டிய சௌகரியங்களுக்கு அடிக்கடி கூட்டத்தார் அரசினர்க்கு விண்ணப்பங்களை யனுப்பவேண்டும். நாம் வேண்டிக்கொள்ளில் ஒருசமயம் நமக்குச் சகாயங் கிடைக்காமற்போயினும் நமக்குக் கெடுதியில்லை. நாம் விடாது முயன்றால் இந்துக்கள் இப்பொழுதே கண்விழித்தார்களென்று எண்ணி ஏதேனும் செய்வார்கள். இனிப் பெருங் கூட்டங்கள் ஆங்காங்கு தோன்றி உலகெலாம் இவ்வபிப்பிராயம் பரவலாமல்லவா? இஃதுசிதமாயின் இதை வெளியிடவேண்டும். அங்ஙனமில்லாவிடினும் ஓர் மூலையில் வெளியிடும்படியே எதிர்பார்க்கிறோம். ஏதோ எழுதியதாய்த் தள்ளவேண்டாம். இப் ப்ரம்மவித்தியாபத்திரிகை ஓங்கி வளர்வதாக.

பத்திரிகாபிமானி.

(மொழிபெயர்ப்பு.)

ப்ரமம்வித்தியா.

ஸம்ஸ்கிருதபாஷை.

(தொடர்பு)

இராமாயணம்.

ஐயா,—கவனியுங்கள்!

இப்பொழுது ஸ்ரீ ராமாயணத்தின் காலத்தையும் அதை யியற்றிய ஸ்ரீமத் வான்மீகி மகரிஷியின் காலத்தையும் குறித்து எழுதவேண்டியது அவசியம். ஸ்ரீராமாயணத்தை முற்றிலும் பார்த்தாலும் கால விஷயத்தை யாதும் நிச்சயமாய்த் தெறியவில்லை. ஆயினும் ஸ்ரீராமசந்திரன் அயோத்திமா நகரை ஆண்டுவந்த காலத்திற்றானே அவர் எழுதியதாய அவ்விராமாயணம் எழுதப்பட்டதாய் தெரியவருகிறது சில இத்தேசத்துப் பெரியோர்கள், ஸ்ரீராமன் திரேதாயுகத்தில் அவதரித்ததாய்ச்சொல்லுகிறார்கள். இச்சங்கதி சில வேத பாகங்களிலும் புராணங்களிலும் உண்டு. உலகத்தில் ஞானமார்க்கத்தை வெளியிடவேண்டி ஸ்ரீசிவபெருமானது அம்சங்கள் அவதரிப்பதுபோல ஸ்ரீமந்நாராயணனது அவதாரங்கள் ஒவ்வொரு கர்பங்களிலும் உண்

[illegible]

ब्रह्मविद्या.

[illegible]

रामायणम्.

[illegible]

[illegible]

டென்பதுண்மையே. ஆயினும் "பெரியோர் இவ்விதம் சொல்லுகின்றார்கள்" என்று மூலம் தெரியாது சிலர் ஸ்ரீராமசந்திரனது திவ்வியாவதாரம் இரண்டு மூன்று திரேதாயுகங்களுக்குமுன்நடந்ததென்று சொல்லுகிறார்கள். அதற்குச்சரியான மூலப்பிரமாணம் அகப்படாமை. அதையறிந்தவர்கள் எமது பத்திரிகைவாயிலாக வெளிவந்தால் மிக நலமாக விருக்குமென்று அவரது கனத்தை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவரையில் யாம் கண்டமட்டில் சமீபத்துத் திரேதாயுகத்திற்றானே அவரது திருவவதாரம் என்றே துணிபாகின்றது. ஏனெனில், உத்திரகாண்டத்தில் ஸ்ரீராமனும்ஸ்ரீலட்சுமணபெருமாளும்பேசிக்கொள்ளும்பொழுதுஸ்ரீராமன் தனது தம்பியைநோக்கி ஸ்ரீயயாதி மகாராஜன் கதையையும் அவனுடைய குமாரர்களான யது, புரு, இவர்கள் கதையையும் சொல்லியிருப்பதாய் தெரியவருகிறது. ஸ்ரீமத்கண்ணபிரான் இதே கலியுகத்திற்கு முந்திய துவாபரத்தில்பிறந்தவரென்று முன்னரே சொன்னோமாதலால், அவரதுகுலத்திற்கு மூலபுருஷனாகிய யது என்பவர் கதை, ஸ்ரீராமனால் வெளியிடப்படுமேல் அக்கதையின் நாயகனாகிய யது மகாராஜாவிற்குப்பிற்காலமல்லவோ ஸ்ரீராமன் பிறந்திருக்கவேண்டும். அதுகொண்டே யாம் ஸ்ரீராமாவதாரம் சமீபகாலமென்று ஊகிப்பது. ஆதல்கொண்டே ஸ்ரீராமாயணத்திலும் பாரதத்திலும், தகப்பன் பிள்ளைகளின் கதைகளிருக்கின்றன. பிதா நரகாசுரன், குமாரன் பகதத்தன்; உற்றுநோக்கில் இவ்விராமாயணம் அனேகலக்ஷ வருஷங்களுககு முன் எழுதப்பட்டதாகச் சொல்லக்கூடும். அக்காலத்துள்ள வானரங்கள் நரர்களைப்போலவே வேலை செய்ததாயும் அவ்விதமே கிஷ்கிந்தாகாண்டத்தில் ஸீதாதேவியைத்தேட வானரங்களை யனுப்புமிடத்து, ஓர் இடத்தில் "சிங்கங்கள் பக்ஷிங்களுடன்" இருக்கின்றன என்றும் சொல்லப்படுதலால் அவ்வித ஜந்துக்கள் இருந்தகாலத்தில் வான்மீகி இருந்திருக்கவேண்டுமாகில், அவ்விதஜந்துக்கள் அநேகலட்சவருடங்களுக்கு முன்னிருக்கவேண்டும். இக்காலத்தவர் ஊகிப்பதாலும் இராமாயண மெழுதிய காலம் அநேகவருஷங்களுக்குமுந்தினதாகவேயிருக்கலாம். இதுநிற்க, வேறுவிஷயத்தை க்கவனிப்பாம். இவ்விராமாயணத்தில் அறியவேண்டியபலவரிய விஷயங்களுள; அவைகளை யாம் அறிந்துகொண்டால், நம்மவர்க்குள் ஒவ்வொருசந்தர்ப்பங்களிற்றோன்றும் ஒவ்வொருவிதஆசங்கைகளும் நமதுமதத்தவரிடமுண்டாகும் துராக்ஷேபங்களும் முற்றிலும் ஒழியும். அவற்றினுள் முதலில் ஒன்றை இங்கெடுத்துக்காட்டப்புகுவாம். இக்காலத்தவர் அறியக்கூடாத அதிக கடினமாயிருக்கும் நமது முன்னோர்சரித்திரங்களைப் பற்றி பற்பலசாதனங்களைக்கொண்டு அறியவேண்டி, சரித்திரப்புத்தகங்களை எழுதுமுன்னரோ, இவ்வுலகின் இத்தேசத்தில் முதற்குடியேறினவர் எச்சாதியார்? இவ்வுலகம் ஆதியில் எவர் கைக்குள் இருந்தது? ஆரியர்கள் எவர்களுக்குப்பின் வந்தவர்கள்? திராவிடர் என்பவர் யாவர்? திராவிடர்கள் எந்த மனிதனால்

[illegible]

ஞானக்கண் திறக்கப்பட்டவர்? ஆரியர்களின் முன் வழிபாது? ஆதியில் ஆரியர்களை விரோதித்தவர் யாவர்? என்று தொடங்கிய பலவாசங்கைகளை எடுத்து இவ்வாசங்கைகட்குத் தத்தமக்குத் தோன்றியபடி அநேக வழிகளில் சமாதானம் எழுதி ஒரு வழி முடித்துவருகிறார்கள். எல்லா ஆதி ஜனங்கள் மட்டில் மூடர்களாயும் மூர்க்கர்களாயும் இருந்திருக்கவேண்டும் என்று மாத்திரம் சொல்லுகிறார்கள். ஏனெனில், இத்தேசத்தவர்க்கு ஆரியர் என்னும் பெயர் இருப்பதே இதற்குச் சான்றாகும். உலகத்தில் வேறு மறு பொருள் இல்லாவிடத்து நன்மை என்றல்லது தீமையென்றாவது ஒன்றையே பற்றிய சொற்கள் எங்கும் வழக்கா முன்னிருந்தவர் சுபாவத்தில் மூடத்தன்மையைப் பெற்றிருந்ததால் சாந்த குணமுடைய நம்மவரை ஆரியர்கள் என்று அழைக்கலாயிற்று. அனாரியர் சிலர் இல்லாவிடில் ஆரியமதம் மணம் பெறாதல்லவா? ஆரியர் என்பது இடுகுறியல்ல; நடை என்பதைச்செம்பொருளாயும், ஞானத்தை ஆகுபொருளாயும், மேன்மையைக் குறிப்புப்பொருளாயும் அடைந்த ரு (ஜ) என்கிற வடமொழி; வினைமுற்றுப் பகுதியினின்று நல்லொழுக்கம் நல்லறிவு மேன்மை இவைகளைப் பெற்றதால் வினையாலணையும்பெயராய் எம்மவர்களுக்கு இச்சொல் ஏற்பட்டது. இவ்விடம் வழிநேர்ந்த சந்தி ஒன்று விரிப்போம். ஆரியசகோதரர்களே! இக்காலத்தவருட்சிலர் தமக்கு ஆரியத்துவம் வேண்டுமெனக்கருதி ஏதேதோ புத்தகங்களில் எழுதிவைத்துக்கொண்டு நம்மவரிடம் வெகுகாலமாய் அதாவது அநாதியாய்க்குடிகொண்ட ஆரியமதத்தை அபகரிக்கவும் எத்தனிக்கிறார்கள். அவர்கள் காட்டும் யுக்திகள் பின்போர் பிரகரணத்தில் மறுக்கப்படும். அதேவிடத்து மிலேச்சர், யவனர் இவர்கள் சுருபத்தைப்பற்றியும் எழுதுவாம். இங்கு மற்றவர் ஆரியர்கள் அல்லவெனபதற்கும் நம்மவரே அத்தன்மை உள்ளவரெனச் சொல்வதற்கும் முக்கியகாரணம் ஒன்றுண்டு; அது இது. அநேககாலமாய் "ஆரியவருணத்தை இரக்ஷித்தான்" என்று வேதவாக்கியந் துவக்கி இக்காலம்வரையில் யாதும் விகற்பமின்றி நம்மவருள் இவ்வாரியபதம் உபயோகிக்கப்பட்டுவருகின்றது. அதுகொண்டே நமது தேசத்திலுள்ள காவியங்களில் பெரியோரை அழைக்க "ஆரிய" என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டுவருகின்றது. மற்றைபதமிழ்முதலிய தேசபாஷைகளிலும் பிராகிருதபாஷையில் திரிந்து (அஜ்ஜ) என்றிருந்த ஆரியபதத்தை ஐய! என்று வருவித்து விநியோகித்துவருகிறார்கள். மற்றவர்கள் முன்னோர்காவியங்களினேனும் இக்காலத்தவர் வழக்கத்திலேனும் இச்சொல்லைக்கொண்டு தம்மவரை வழங்குவதில்லை என்பது திண்ணம். இஃது மாத்திரம் போதுமல்லவா? யாம் ஆரியர் என்பதற்கும் மற்றவர் அங்ஙனம் அல்லாதவர் என்பதற்கும் இனி விஷயத்தைக் கவனிப்போம். இவ்விதம் எல்லோரும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவே இருந்திருப்பின், ஓர் சாரினிடம் இவ்வித நற்சொல்லை உபயோகிப்பது எங்ஙனமை

[illegible]

...யுப்? இச்சொல் எல்லா மனிதர்களைக் குறிக்காதென்பது நாம் எல்லோரும் அறிந்ததன்றோ? ஓர் சார்பினர் ஆரியராயின், இவருக்கு முன்னும பின்னும் அனாரியர் எவர் என்னும் ஆசங்கை நிகழ்ந்தது. அவர்களுள் பின் வந்த அனாரியர் கதையைப்பின் சொல்வோம். முன்னாரியர்கள் யாவர் என்று தேடிப்பார்க்கில் அவர், இவர் என்பது ஸ்ரீராமாயணத்தின் உத்திரகாண்டத்தில் தெற்றெனப் புலப்படுகின்றது. அங்கு ராக்ஷதர்களைச் சிருஷ்டித்த கதையைச் சொல்லும்பொழுது முதலில் ஜல சிருஷ்டியும் உடனே சில பூதங்களின் சிருஷ்டியும் அவரவர் குணங்களுக்கேற்ப யக்ஷர் எனவும் ரக்ஷஸர் எனவும் பிரமன் பெயர் கொடுத்ததும் வெளியாகிறது. பிறகு வெகுகாலம் சென்று சிருஷ்டிக்கப்பட்ட தேவர் பூதேவர் முதலியோர் இவரது கொடுமை பொறுக்காது ஸ்ரீமந்நாராயணனைச் சரணமடைந்து அவரைக்கொண்டே ராக்ஷஸர்களைக் கொன்றுவிட்டுத் தாம் சுகமடைந்தார்கள் போலும். இராமாயணத்தைவிலக்கத்துடன் நோக்கில் அவர்களே இத்தேசத்து முதற்குடிகள். அவரை அதுகொண்டே பூர்வதேவர்எனச்சொல்வது. தேவர்களுக்கும் பூதேவர்களுக்கும்முன் பிறந்தவர்கள் ஆனதால்; தற்காலத்திப்பாஷையில் பூர்வதேவர்கள் என்கிற பதம் அசுரர் என்கிற ஓர் சார்பினருக்குப் பெயராகவே வழங்கிடினும் அது முன் நாம் காட்டியசரியான காரணத்தால் ராக்ஷஸர்களுக்குப்பெயராகவிருந்து, பிறகு அந்தக் கொடுமை சம்பந்தம் பற்றி ஆகுபெயராய் அசுரர்களிடம் வந்திருக்கலாமாகையால், யாம் ராக்ஷஸரை அங்ஙனம் சொல்லக் குற்றமாகாதென்க. இவ்விராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் இந்தஓர் விஷயத்தை மட்டில் கவனித்தால் முன் வெளிப்பட்ட ஆசங்கைகளிற் சிலஒழியும். எங்ஙனமெனில், யக்ஷ ராக்ஷஸர்களே முன் மனிதர்கள்; முதலில் அவர்களே பூமியிற் குடியேறினவர்கள்; அவர்கள் கொடுமை உள்ளவர்கள்; எல்லா ஜந்துக்களையும்தின்பண்டமாகக் கொண்டவர்கள்; அவர்களுக்குப்பின் வந்தவர்கள் ஆரியர்கள்; மற்றைய சங்கைகளின் மறுமொழி மறுபத்திரிகையிற் காண்க.

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

சிவன் துரியரென்பது.

(௩௩-வது பக்கத்தொடர்பு.)

ம-ா-ா- ஸ்ரீ ப்ரம்வித்தியா பத்திராதிபரவர்கட்கு வந்தனம்

ஐய!

சென்றஇரண்டுமாதங்களின் சஞ்சிகைகளில் வேப்பத்தூர் பண்டிதர் விஷயமாகச் சிலவரைந்தோம். இந்தசஞ்சிகையில் எலத்தூர் பண்டிதர்விஷயமாகச் சிலவெழுதுகிறோம்.

[illegible]

இவர் சென்றசூலை மாதத்தில் சிவாபகர்ஷமான சிலவிஷயங்களெழுதித் தங்கள் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அதன் சொரூபமித்தகையினதென்பதை யாமீண்டு விளக்கிக் காட்டி, எமதுண்மையை மேல்விளக்கத்திட்டி யுபகரிப்பாம்.

பஸ்மஜாபாலத்தில் விட்டுணுவானவர் சிவனைவழிபட்டாரென்று கூறியிருப்பதுகொண்டே விட்டுணுவுக்கு விபூதிதாரணங்கூறுதல் கூடாதெனவும், விஷ்ணு வழிபட்டாரென்பதே அர்த்தவாதமாகையால், அவர் விபூதிதரித்தாரெனலியாங்ஙனங்கூடாதெனவும், அவர் சிவனை வழிபட்டாரெனல் அர்த்தவாதமென்பதற்குப் பலசுருதிகள் சான்றெனவும், அந்தச்சுருதிகள் "அக்கினி தேவர்களுக்குள் கீழானவன், விஷ்ணுவே பிரமன்; நாராயணனேபரப்ரஹ்மம்; நாராயணனேபரதத்துவம்; நாராயணனன்றோ விருந்தனன்; பிரமனிருந்திலன்; ஈசானன் இருந்திலன்; நாராயணனிடமுருத்திரன் பிறந்தனன்; உள்ளும்புறனும் வியாபகன் நாராயணன்; நாராயணனொருவனேயிருந்தனன்" என்னும்பொருள்களைக்கொண்டவையெனவும், இவற்றுள் "நாராயணனொருவனே யிருந்தனன்" என்னும் வாக்கியத்தால் இரண்டாம்பொருளக் காலத்திலிருந்ததெனச்சொல்வது அமையாவாமெனவும் "பிரமனிருந்திலன் ஈசனிருந்திலன்" என்று ஏனையோர்நிலைமையை மறுத்து வாசுதேவன்பெருமையை விளக்கியிருத்தலால், அவ்வாசுதேவன் பெருமையை யாம் சொல்லவும் வேண்டுமோவெனவும் நமது பண்டிதர்சந்தோஷித்துப்பேசினுர். இவரது சகூவிகள் வெகு திர்ப்பலங்களாயினும் எம்மைப்போலவே பண்டிதர்களெல்லாமும் நிஸ்புருகமாயிருந்துவிட்டால், பாமரராயுள்ளவர்கள் இவரது பிரவசனத்தால் பிரமிக்கவிடமுண்டாகுமென வெண்ணங்கொண்டு யாமறிந்த, வளவில் சிலசமாதானங்கள் கூறிச்சிவபுண்ணியத்தைப் பரிபாலித்திடுவோம்.

நம்மவர் காட்டியவசனங்களில், முதல்வாக்கியம் "அக்கினி தேவர்களுக்குக் கீழானவன்" என்பது. இரண்டாவதுவசனம் "விஷ்ணுவே பரமன் அல்லது மேலானவன்" என்பது. இவற்றைவிசாரிப்பாம். தேவர்க்களில் அக்கினிதானே கீழிட்டவன்? சூரியன் சந்திரன் முதலிய வொளிகளுக்கெல்லாமுள்ளொளியாயிருந்து பிரகாசிப்பிக்கும் சுடர்ப்பிழம்பாகிய அக்கினியை யாவரினுங்கீழிட்டவனுகக் கூறுதல் யாங்ஙனம்? அக்கினி காரியத்தினுற்றானே அந்தணராகுதி பெருகி அவர்க்குவாழ்வுண்டாமெனின், அவ்வக்கினியைத் தாழ்பொருளாகக் கோடல் யாங்ஙனம்? இவைகளையோசிக்கும்பொழுது அக்கினியைத் தேவர்களிற் கீழிட்டவன் என்றது ஓரவசரமேயன்றி ஸார்வகாலிகமல்ல. அவனுக்கு மேலிட்டவர்களில் அவன் கீழானவன் என்பதையே ஆண்டுக்கிரகிக்கவேண்டியது. இப்படியே "விஷ்ணுவேபரமன் அல்லது மேலானவன்" என்றவிடத்திலுங்கொள்ளவேண்டியது. விஷ்ணுவானவர் ஜலதத்வாதிஷ்டான தேவதையேயன்றி வேறில்லை. ஜலத்துக்குமேல் அக்கினி, அக்கினிக்குமேல் வாயு, வாயுவுக்குமேல் ஆகாசம் என்னுந்தத்துவங்களுளவாகையால், அவ்வத் தத்துவாதிஷ்டான தேவதைகளை நோக்க விஷ்ணுவுக்கு யாண்டுப்பாரமீயம் நிலைக்கும்? இப்படியே யொடுக்கத்தினுங்கண்டுகொள்க. எங்ஙனமெனின், எல்லாஞ் ஜலார்ணவமாகின்ற காலத்தில் நாராயணர் வடபத்திரசாயியாய், அந்த வெள்ளத்தின்மேற் படுத்துக்கொண்டிருப்பாரென்று வேதங் கூறுகையால், அது ஸர்வ ஸம்

[illegible]

மாரமாகாதொழிந்தது. ஜலமதிக்கிரமித்தமையால் பிருதிவி அதில்லீனமாயினதென்பதே. "விஷ்ணுவேபரமன்,, என்னும் வாக்கியத்தின் கருத்தென்று அபிமானமொழிந்து பார்ப்போர்க்குவிளக்கும். விஷ்ணுவேபரமனென்பது, பிருதிவிக்கதிஷ்டானமாகிய பிரமனும், அவனிற்கிழிட்ட காரியகோடிகளுமாகிய தேவர்க்களில் மேலானவன் என்பதையே தெரிவித்தது. இவ்வளவேயன்றி, அக்கினிதத்வாதிஷ்டான தெய்வமாகிய வுருத்திரனை நோக்கவிட்டுணுவுக்குப் பிரமன் அல்லது மேலானவனென்னுஞ்சிறப்பு நிலைக்கமாட்டாது. "பராத்பரதரோப்ரம்மா தத்பராத்பரதோஹரிஃ. தத்பராத்பரதோஈசஃ தஸ்மாத்துல்யோதிகோநஹி,, என்றுஞ்சுருதியைப்பார்த்திருத்தால் "விட்டுணுவே பிரமன்,,என்றவாக்கிய தரிசனமாத்திரத்தானே நமது தோழர் வெளிவக்துவிடமாட்டார்.இதில் பிரமன் பரம், அவனில் விட்டுணு பரம். அவனில் ஈசன் பரம். அவனுக்குத் துல்யமும் பரமுமில்லையென்றபெறப்பட்டமையால், விட்டுணுவே பரமன் எனனுக்கௌரவங்கிடைப்பதரிது. "தமீசுவராணும்பரமம்மஹேசுவரம் ,,என்னுஞ்சுருதியால், ஈசுவரர்களை நோக்க மகேசுவரரும், தேவர்களை நோக்க மகாதேவரும், பசுக்களை நோக்கப் பதியுமாய் விளங்குகின்றார் சிவபெருமான் என்றபெறப்பட்ட அர்த்தபாஹுள்யத்தை இனியேனும் நமது தோழ ரறிவாராக.

இனி "நாராயணனே பரப்பிரம்மம், நாராயணனே பரதத்வம்,, என்னுஞ் சுருதி "அன்னம் பிரம்மம், பிராணன் பிரம்மம்,, என்பனவற்றோடொருக்கே யுபசாரமாகக் கழியும். "விட்டுணுவே பரமன்,, என்பதனோடுஞ் சேர்ந்தொதுங்கும். இந்த நாராயண பரப்பிரம்மத்வ நிருபண வசனம், சிவனையுபாஸ்யராகவும், நாராயணனையுபாஸகராகவுங் கூறிய பகுதியிலுளவாகையால், உபாஸ்ராகிய சிவனது உத்கர்ஷதர்மாரோபணத்தை உபாஸகர்சிரேஷ்டராகிய நாராயணரிடம் வலம்பித்துப் பிரதிபாதித்தபடியேயாம். அங்கே நாராயணருடைய ஹ்ருத்கமலத்தை வர்ணித்து, அதன் மத்தியில் பரமாத்மாவுக்கு இருப்புக் கூறினமையால், நாராயணன் இலக்கணையாலும் பிரம்மமாயினனென்றறிக. விரிக்கிற் பெருகும். இது நிற்க.

"நாராயணனொருவனன்றே யிருந்தனன்" என்பது சூக்ஷ்மசிருஷ்டிக்கு அநந்தரம், ஸ்தூல சிருஷ்டிக்குப்பூர்வம் பிரயோஜனமாகத்தக்கது. "நாராயணனொருவனே யிருந்தான் பிரமனிருந்திலன், ஈசனிருந்திலன் ,, என்பது கற்பபேதத்தாலென்றுணரத்தக்கது. அப்ராகிருதமாகிய சூக்ஷ்ம சிருட்டிக்குக்கர்த்தாவாய் நாராயணராய திரிக்தமாகிய தேவதை யொன்று வேண்டுமாகையால், பிராகுக்த சுவேதாசுவதராதர்வசிரஸ்சிகாத்யுபநிஷத்துக்களிற் கூறியபடியே ஸூக்ஷ்ம சிருஷ்டியும், விஷ்ணுவாதி மூர்த்தித்திரய சிருஷ்டியும் சிவபெருமானாலேயே யுண்டாயிற்றென்று சாதுக்கள் சாதத்தாற் சாதியாநிற்பர். சுவேதாசுவதரத்தில் "யதாதமஸ்தந்நதிவானராத்ரிர்- நஸந்நசாஸச்சிவயேவகேவலஃ,, என்னும் வசனமானது தமோமாத்ராவசேஷமாகிய சிருட்டிக்குப் பூர்வம் சிவ பெருமானொருவரேயிருந்தாரென்று தெரிவிக்கின்றது. இந்த வாக்கியத்தில் "சிவயேவ கேவலஃ, என்று சிவன் ஒருவருக்கே சத்பாவங்கூறி "ஏவ, என்றுஇதரவிவச்சேதம் வெளிப்பட்டதனால், சதசதாத்மகமாகிய பிராகிருதா ப்ராக்ருத ஸூக்ஷ்ம ஸ்தூல சிருட்டிகளுக்கு முன்பு சிவபெருமானொருவரே யிருந்தாரென்று வெளி

[illegible]

ப்பட்டுப் பரமகாரணத்துவம் அவருக்கே சாதிக்கப்பட்டது. சிருட்டிக்குப் பூர்வம் எப்படி பவரொருவரோ யிருந்தனரோ, அப்படியே ஸர்வ சம்மாரகாலத்தும் அவரொருவரே யிருந்தாரென்று கூறுஞ் சுருதியையும் ஈண்டெழுதுகிறேம். "ப்ரத்யக் ஜநஸ்திஷ்டதி ஸஞ்சுகோசாந்தகாலே, ஏகஏவ ருத்ரோநத்விதீயாயதஸ்தே, நப்ரம்மா நவிஷ்ணுர்ந சூர்யோநாக்னி சந்த்ரதாரகா:,, என்னுமிந்த வாக்கியம ஸர்வ சம்மாரகாலத்தில் உருத்திரமூர்த்தி யொருவர் தவிர இரண்டாவது வஸ்துவுக்கு இருப்பே கிடையாதென்றும், பிரமா, விஷ்ணு, சூரியன் அக்னி, சந்திரன், நட்சத்திரங்கள் முதலாக வொன்றுமில்லையென்றுந் தெரிவிக்கின்றது. இந்த வசனங்களுக்கு முன்னே நமது ஏலத்தாரார் காட்டியவசனங்கள் எங்கே சனம் பெறும்? உலகத்தைச் சிருஷ்டித்துக் காத்து ஒருக்கிவைத்தல் அல்லவோ முக்கிய பிரம லக்ஷணம்? "ஈசானனிருந்திலன்" என்பது குணருத்ர பரமாகக் கற்பபேதத்தால் சமர்த்திக்கத்தக்கது. யாம் காட்டிய வசனத்தில் "விஷ்ணு விருந்திலன்" என்பது "அந்தகாலே,, என்னும் பிரயோகத்தால் ஸர்வசம்மாரகாலத்தையபேக்ஷித்தமையால் "உருத்திரனுக்குமேலொரு தெய்வமும், சம்மாரத்துக்குமேலொரு கிருத்தியமுமில்லை,, என்னுஞ்சுருதிபரியாலோசனையால் மூலவிஷ்ணுவையே (அப்படி யொருவர் நமது நண்பர் இஷ்டப்படியிருக்கில்) தொடர்ந்து பற்றி அவருக்கே அபகர்ஷத்தை நாட்டியதென்றறிக. குணருத்ரர்வேறு, துரியருத்ரர் வேறு என்பதை "ப்ரம்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்ஸம்ப்ரஸூயந்தே- நகாரணம்காரணாந்துத்யேயச்சம்பு:,, என்னுஞ் சுருதி தெரிவிக்கின்றது. திரிமூர்த்திகளுங் கற்பங்களில் மாறி மாறி யொருவரிடத்திலொருவர் ஜநிப்பதுண்டாகையால், அதுகொண்டே அவர்களுக்குப் பரமகாரணத்வம் சாதிக்கமுடியாது. இந்த மூவர்களுக்கும் ஜநகராய் விளங்குந்துரியசிவனுக்கே பரமகாரணத்வம் நைஜமென்க. இப்படி யோசிக்கிறபோது நமது பூர்வபக்ஷிபாரது வாதம் எங்கே பயன்படும்? இதனால், நாராயணருக்கு நம்மவர் நாட்டவெழுந்த காரணத்வம் வெயின் மஞ்சளாகியதென்க.

இனி "நாராயணனிடம் உருத்திரன் பிறந்தான்,, என்று எழுதியதைக் கவனிப்பாம். "நாராயணாத்ருத்ரோஜாயதே,, என்னும் வசனமே அவர்கொண்டது. இது "தசரதாத்ராமோ ஜாயதே,, என்பது போல்வதேயாம். தசரதனிடத்து இராமன் பிறந்ததனால் இராமனுக்கு அபகர்ஷமும், தசரதனுக்கு உத்கர்ஷமு முண்டாகுமா? அங்ஙனமுண்டாயினன்றோ உருத்திரனுக்குத் தாழ்வும், விட்டுணுவுக்கு வுயர்வும் ஸித்திக்கும். நாராயணனிடம் ஓர் சற்பத்தில் பரசிவ சங்கல்பத்தின்படிப்பிறந்த குணருத்ரனையே யது தெரிவித்தமையால், பிரமவிட்டுணுருத்ரேந்திரர்களாகிய யாவர்களுக்கும் ஜநகராகிய துரியருத்ரனை அது பாதிக்கமாட்டாதென்க. இந்த விசாரத்தால், நமது பூர்வபக்ஷிபார் "உருத்திரன் மந்திரப் பொருளாகான், அவன்

[illegible]

பிரமனுடைய புத்திரனென்றும், பிரமன் நாராயணனுடைய புத்திரனென்றும், பலவிடங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது,, என்றுஎழுதி சந்தோஷித்ததும் உசிதமில்லாததாயொழிந்தது. பிருதிவியிலாவது, ஜலத்திலாவது அக்னி பிறக்கமாட்டாதாகையால், பிரம்மாவினிடத்திலாவது விட்டுணுவினிடத்திலாவது உருத்திரன் பிறந்தானென்பதைத் தத்துவ சாஸ்திரபரிக்ஷகர்கள் கேட்டால் பலமுறை நகைத்துப் பரிகசிப்பரென்க. இங்ஙனமிற்க.

"உள்ளும் புறனும் வியாபகன் நாராயணன்,, என்று ஓர் சுருதி யுரைப்பதாகப் பூர்வபக்ஷியார் கூறினர். இவர் "சர்வவியாபகவான்-தஸ்மாத்ஸர்வகதச்சிவ:,, என்னுஞ் சுருதியை மட்டில் ஏன் ஒளித்தார்? அன்றியும், "பிருதிவியிற் பவராயும், அப்புவில் சர்வராயும், அக்னியில் உருத்திரராயும், வாயுவில் சமராயும், ஆகாசத்தில் மகாதேவரையும், சூரியனில் உக்ரராயும், சந்திரனில் ஸோமராயும், ஆத்மாவினிடத்தில் பசுபதியாயும் சிவம் விளங்குகின்றது,, என்பது முதலிய பல சுருதிகளையும் அவர் மறந்தார் போலும். மறவாதிருப்பாரெனின், "நாராயணன் வியாபகன்,, என்ற வசனமொன்றைக் கையிற்பிடித்துக்கொண்டு காட்டவரமாட்டார். ஆயின், அந்தவசனத்துக்குக் கதியாதெனின், பிருதிவியில் அப்பு வியாபக முடையதாகையால், அந்த நாராயணர் பிருதிவியினுள்ளும் புறம்பும் வியாபகராவதில் எமக்கொரு ஆக்ஷேபமுமின்று. அது அங்ஙனமிராது வேறு எங்ஙனே யிருக்கும்? அப்புவுக்குத் தேயு வாயுக்களில் வியாபகமில்லாதவாறு நாராயணரது வியாபகத்தையும் மேலிடங்களில் யோசிக்கவேண்டியது. சகல தத்வாதீதமாய் விளங்குஞ் சிவத்துக்கே எல்லாத் தத்துவங்களிலும் வியாபகங் கூற முடியுமாகையால், சிவன் ஒருவரே சர்வ பரிபூரணரென்று அறியத்தக்கது.

மேல் "இச்சகத்திற்கு ஈசுவரி விட்டுணுவின் றேவி; சர்வபூதங்களுக்கும் ஈசுவரி ஸ்ரீதேவி,, எனவும், "எவன் பிரமனைச் சிருட்டித்து வேதங்களை யவனுக்குபதேசித்தனன்,, எனவும் பெறப்பட்ட வுண்மைகளைப் பிரஸ்தாபித்து நாராயண பரத்வத்தைச் சாதிக்கவந்தார். "ஈசாநஸ்ஸர்வவித்யாநாம், ஈசுவரஸ்ஸர்வபூதாநாம்,, என்னும் மந்திரப்பொருளை யோசிப்பதனானே, ஈசுவரனும் மந்திரப்பொருளுமாவார் சிவபரஞ்சுடரே யென்று வெளிப்படுகின்றது. ஈசுவரனுடைய சக்தியே ஈசுவரியாதல் நிராக்ஷேபம். எஜுர்வேதத்தில் சிவனுடைய தாதர்த்மியமாய் விளங்கும் சிவசக்தியே தெய்வமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும், பக்கத்தில் உமாதேவியாரையும், நடுவில் ஸ்கந்தரையுங்கொண்டு விளங்கும் ஸோமாஸ்கந்தரையும், அவருடைய துவாரபாலகர்களையும், அவருடைய பத்தினியாராகிய உமாதேவியாரையும், தேவசேனையாராகிய ஸ்கந்தருடைய பத்தினியாரையும்,ஸ்கந்தரையும்; க்ஷேத்திரபாலகரை

[illegible]

யும் பூசிக்கவேண்டியதென்று அவ்வெஜுர்வேதந்தானே பிரகாசிப்பிக்கின்றது. இவைகளை நோக்கும்பொழுது, விட்டுணு பத்தினியை ஈசுவரி யென்றது ஔபசாரிகமும், ஸரஸ்வதி முதலினோரை நோக்க வாஸ்தவமுமாகும். ஸரஸ்வதிக்குக் கல்வியும், இலக்குமிக்குச் செல்வமும், பார்வதியாருக்கு ஞானமும் திருமேனி ளாயினமையால், நமது பண்டிதர் காட்டிய ஸ்ரீதேவியினது ஏற்றந் தலைகாட்டாதென்க. "எவன் பிரமனைச் சிருட்டித்து,, என்றுதொடங்கியவசனம் சைவ வாசகமென்றறியப்பாலது.

இதுமட்டோ, நம்மவர் வேறு ஒருவிசித்திரம் பகர்ந்தனர். அது, கீதையில் "வேதங்களாலறியப் பட்டவனும், வேதாந்தத்தை யருளிச்செய்தவனும், வேதங்களையறிந்தவனும் யானே,, என்று கண்ணன் கூறினானென்றும் சந்தோஷித்ததேயாம். கண்ணன் உபமன்னியரிடத்தில் பாசுபத தீக்ஷை பெற்று ஸோகம்பாவனை யடைந்திருந்தவனாகையால், சுவேதாசுவதரத்தில் "வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்யோ, வேதாந்தக்ருத்வேதவிதேவசாஹம்,, என்று சிவன் கூறியதையே சிவோகமென்னுமநுசந்தானமுடிவாற் கூறினானென்க. சிவனுக்குந்தமக்கும்பேதமில்லாமையைச் சிவோகம் என்னும் பாவனையால் இந்தக்கண்ணனேயன்றி வாமதேவாதிகளுங் கூறியுள்ளாராகையால், நம்மவர்கண்ணனிடத்துக் கூறிய வுசிதம் பயன்படாதாயிற்று.

இனி ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் பகவத்கீதைக்கும் விட்டுணு ஸஹஸ்ரநாமத்திற்கும் பாஷியங்கள் செய்தாரெனவும், அங்ஙனஞ்செய்தது அவற்றின்கௌரவத்தை நோக்கியெனவும் ஓர் விசேஷங்கூறினர். ஸ்ரீசங்கராசாரியரவைகளைத் தெரிந்தெடுத்துக்கொண்டே அவை யோக்கியமுடையவையாகா. அவர் பரமசாம்பவர் என்பதைப்பற்றி அவரெழுதிய பாஷியங்கள்விட்டுணுவைப் பரம்பொருளாய்க்கொண்டு வெளிவந்தனவல்லவென்றுசமயம் நேர்ந்தொழி எழுதுவாம். அதவா அவர்தழுவிய வுயர்வையே அந்நூல்களில் யாங்கொண்டகாலத்தும், அவை அத்வைதத்திற் பரிவசானமுற்று விட்டுணு பாரம்மியத்தை நிலைக்கப்பண்ணமாட்டா. ஆத்மபரமாகவே ஸமர்த்தனத்தைப் பேற்றுமணம்பெறும். அதனால், விட்டுணு பரத்வம் நாட்டவெழுந்த நம்மவருக்கு அவை விருதாவாகவே முடிந்தன. விரிக்கிற் பெருகும்.

இவ்வளவிலமையாது, சிறுவர்களுக்கு வித்யாப்பியாசஞ் செய்யும்பொழுது ஹரியென்று சொல்லிவைப்பதும், அச்சுதனென்றே ஆசமனஞ்செய்வதும், கோவிந்தனென்றே ஸங்கல்பஞ்செய்வதும், ஹரி ஓம் எனவே வேதமோதுவதும், கர்மங்களின் பிராயச்சித்தமாகக் கிருஷ்ணவென்பதும், ஒருவனே விட்டுணுவென்று தொடங்குமந்திரத்தால் பிதிர் தேவதைகளு

[illegible]

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.

1837-வரு மார்ச்சுமீ த்தில் சென்னை "வேதாந்த விசாரணசபையார்" உலகமும் ஆத்துமாவும் சத்தா? அசத்தா? சதசத்தா? என்னும் வினாக்களைச் சிறு பத்திர வாயிலாகக் கிறிஸ்தவரைக் கேட்டார்கள். அவ் வினாக்களுக்கு விடை பைபிலின்கண் ஆதாரமில்லாதிருந்தும் நான்கு கிறிஸ்தவர், தனித்தனியே பொருத்தமில்லாத விடையளித்தார்கள். அதனுபாசம் வெளிப்படும்பொருட்டும், உண்மையை யாவரும் உணர்தற்பொருட்டும் "ஓர் சம்ஸ்கிருதபண்டிதர்" அவ்விடைகளைக் கண்டித்து, "கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு" என்னும் புத்தகமொன்று ஒன்பது பாரத்தில் அச்சிட்டிருக்கின்றார். சமய ஆராய்ச்சிசெய்யும் யாவரும் அதை வாங்கிவாசிக்கவேண்டியதே. விலையும் சொற்பம்; காகிதமோ உயர்ந்தது. வேண்டியவர், சென்னை முத்தியாலுப்பேட்டை தம்புசெட்டிவீதி 316-நெ. மதராஸ் ரிப்பன் பிரஸில் ம-ா-ா-ஸ்ரீ சை. ர. நமசிவாயசெட்டியாரிடத்திலும், சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரிடத்திலும முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை அணா 2. தபாற்கூலி பை 6.

க்குத் தத்தஞ்செய்வதும், அநாதஸம்ஸ்காரத்தில் கோவிந்தவென்றுச்சரிப்பதும், ஸந்யாசிகள் நாராயணனென்றுசொல்வதும், அவர்களுக்கு நாராயணபலியே செய்வதுமாகிய யாவும் விட்டுணுவே தெய்வமென்பதை நாட்டுகின்றனவென வோராதரவு கண்டு கூறினர். இவைகள் சுரோளதங்களாகாமையால் இவைகளுக்குப்பதிலுரைப்பது அநாவசியமெனக் கொண்டு இம்மட்டிலு பரதியடைந்தாம். மேற்கூறியபடியேதான் அநுட்டிக்கவேண்டியதென்று சுருதி நியம மில்லையாகையாலும், ஒவ்வொரு மதஸ்தரும் பின்ன பின்னமாகத் தந்தமக்கிசைந்தபடியே யநுட்டிக்கின்றமையாலும், இவைகளைக்கொண்டே பரத்துவத்தை காட்டவேண்டியதென்பது பொருப்பாகாமையாலும் நம்மவர்காட்டிய அல்டஹேதுக்களை யாம்மதியாது ஒழிந்தோம். பிரபதமந்திரம் "தபர்சதே ஜபர்சதே,, என்று உபக்கிரமித்து "கர்மாதிபதயேநமஃதேத்ரவிருபாக்ஷாஸி,, என்று சிவப்பிரசம்சை செய்து, "த்வாய்ப்ரபத்யேத்வயா ஸூதமிதம் கரிஷ்யாமி,, என்றது முதலாகக் கூறுகின்றது. காத்யாயநக்குகயத்தில் "நமோருத்ராயாப்ஸுஷதே ஸ்வஸ்திமாஸசம்பாரயேதீ,, என்றதுமுதலாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் சகல கர்மங்களுக்கும் சிவனே அதிபதியாயினர். அன்றியும், ஸப்தஹவிர்யஜ்ஞும், ஸப்தபாகயஜ்ஞும், ஸப்தஸோமயஜ்ஞுங்களாகிய இருபத்தொரு யஜ்ஞங்களுக்கும் கபர்த்தி யென்னும் பேருடைய சிவனே கர்த்தாவென்று "அயம்ஸோமஃ,, என்னுஞ் சுருதியானது ஸ்தாபிக்கின்றது. இத்யாதிப் பிரபல பிரமாணங்களைய றிந்தபேர்கள் நம்மவரது போதத்தை எங்ஙனே வொப்புவார்கள்? இனியேனும் பூர்வபக்ஷிபார் ஊன்றி விசாரித்து வெளிவருவாராகில் அவருக்கும் ஏனையோர்க்கும் சுகம் பயக்கும். இவ்வளவேயன்றி, யாம் நமது வேப்பத்தூர்ப்பண்டிதர்க்கு எழுதிவிட்ட மூன் சஞ்சிகையிலுள்ள விஷயங்களையும் நமது தோழர் கவனிக்கக்கடவர். இவைகளைக் கவனித்துப் பார்ப்பாரெனின், பஸ்மஜாபாலத்தில் விட்டுணுவானவர் சிவனை வழிபட்டாரென்று கூறியிருப்பதை அர்த்தவாதமென்று பேச நமது அன்பர் ஆசைகொள்ள மாட்டார். அது சத்தியமென்று மகிழ்ந்திடுவர்.

இதுகாறும் நம்மவர் விட்டுணுவுக்கு ஊர்த்வ புண்டரமே தார்பமாகத்தக்கதென்று சில வசனங்களையெழுதினாராகையால், அவைகளை நமது வஞ்சிநாட்டுப் பண்டிதர்க்குப் பிரத்தியேகமாகயாம் வரையும் பிரமேயத்திற் சேர்த்துக்கதி கூறுவாமென்க. நமது தோழராகிய இவ்வேலத்தூராருக் செழுதியதை வேப்பத்தூராருங் கண்டுகளிக்க வேண்டுமென்பது யெமது விருப்பென்க. சுபம்.

ஸித்தாந்தி.

Printed and Published for the Proprietor,
at the Brahmavidya Press, Chidambaram.